# அ.தி.மு.க. ஆட்சியில் கிடப்பில் காவிரி - குண்டாறு திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!... முதல் பக்கத் தொடர்ச்சி

நூலகக் கட்டடம் பால்குடங்கள் வைப்பதற்கு மண்டபம் முளைப்பாரி மண்டபம் என்று பசும்பொன்தேவர் திருமகனாருக்குப் புகழ் சேர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

இப்போது பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் அவர்களின் 117ஆவது பிறந்தநாளை முன்னிட்டு குருபூஜை நடத்தியிருக்கிறோம். பசும்பொன்னில் இருக்கும் அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசு அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பான முறையில் செய்திருக்கிறது.

நேற்று முன்தினம் கூட, பசும்பொன் திருமகனாரின் பிறந்தாள் விழாவின் போது ஏற்படுகின்ற கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், மழை - வெயிலில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கவும் 1 கோடியே 55 இலட்சம் ரூபாய் செலவில் புதியதாக அமைக்கப்பட்ட தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தை திறந்து வைத்திருக்கிறோம்.

**பசும்பொன் தேவரைப் போற்றும் திட்டங்களை தொடர்ந்து செய்வோம்!**

இதுபோன்று பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரைப் போற்றும் செயல்களையும் - திட்டங்களையும் தொடர்ந்து செய்வோம்!

எனவே அவரது புகழ் வாழ்க! வாழ்க! என்று இந்த நேரத்தில் குறிப்பிட்டு கூறிக் கொள்கிறேன்.

**செய்தியாளர் :-** பி.ஜே.பி. மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கிறது. மீனவர்களின் கைது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. அது பற்றி.......

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :-** தொடர்ந்து நாங்கள் கடிதம் எழுதிக் கொண்டு இருக்கிறோம். நான் டெல்லிக்குச் செல்லும் போதெல்லாம் பிரதமரிடம் பேசியிருக்கிறேன். வெளியுறவுத் துறை அமைச்சரிடத்திலும் இதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறோம். அவர்களும் அவ்வப்போது, நாங்கள் எழுதக் கூடிய கடிதத்திற்கு நடவடிக்கை எடுத்து,

> **“மீனவர்கள் பிரச்சினை குறித்து தொடர்ந்து நாங்கள் கடிதம் எழுதிக்கொண்டு இருக்கிறோம். நான் டெல்லிக்குச் செல்லும் போதெல்லாம் பிரதமரிடம் பேசியிருக்கிறேன். வெளியுறவுத் துறை அமைச்சரிடத்திலும் இதை குறிப்பிட்டு சொல்லியிருக்கிறோம். அவர்களும் அவ்வப்போது, நாங்கள் எழுதக்கூடிய கடிதத்திற்கு நடவடிக்கை எடுத்து, மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். இருந்தாலும், இது தொடர்ந்து இருந்துவருகிறது. இதற்கு முடிவு காண வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அதில் எந்தவிதமான கருத்து மாறுபாடும் கிடையாது.”**

மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு வருகிறார்கள். இருந்தாலும், இது தொடர்ந்து இருந்து வருகிறது. இதற்கு முடிவு காண வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம். அதில் எந்த விதமான கருத்து மாறுபாடும் கிடையாது.

**செய்தியாளர் :-** கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட தேவர் கல்லூரியில் பணியிடங்கள் நிரப்புவது தொடர்பாக...

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :-** அதற்கு தொடர்ந்து நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். இப்போது கூட 12 பேருக்கு பணி நியமனம் வழங்கியிருக்கிறோம். உரிய நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படும்.

**செய்தியாளர் :-** காவிரி வைகை குண்டாறு இணைப்புத் திட்டம் கடந்த 60 ஆண்டுகளாக கிடப்பில் இருக்கிறது. அதுபற்றி....

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :-** 2008 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தான் காவிரி குண்டாறு திட்டத்தின் முதற்கட்டப் பணி கதவணையிலிருந்து துவக்கப்பட்டது. அதன் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் 9 ஆண்டு காலம் அதை கிடப்பில் போட்டு வைத்திருந்தார்கள். கடைசி வருடத்தில் தான் அதை செய்யப்போகிறோம் எனும் அறிவிப்பை வெளியிட்டு தொடர்ந்தார்கள். அதையும் கோவிட் பெருந்தொற்று வந்த காரணத்தினால் கிடப்பில் போடப்பட்டது. இப்போது நாங்கள் ஆட்சிக்கு வந்தபிறகு அந்தப் பணிகளை துரிதப்படுத்தி தற்போது 40 சதவிகிதம் வரை நிலஎடுப்பு பணிகள் முடிந்திருக்கிறது. தொடர்ந்து அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

---

### வைகை ஆற்றிலிருந்து

# காரியாபட்டி, மல்லாங்கிணறுக்கு ரூ.75 கோடியில் குடிநீர்த் திட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, நவ.2-

வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு, விருதுநகர் மாவட்டத்தில் உள்ள காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்தினை ரூ.75.85 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு, வைகை ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு விருதுநகர் மாவட்டத்தில் உள்ள காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கு ரூ.80.00 கோடி மதிப்பீட்டில் 29,000 மக்கள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவித்தது.

இத்திட்டத்திற்கு தேவையான நீர், வைகை ஆற்றில் மேலக்கால் அருகில் கொடிமங்களம் தடுப்பணை மேல்புரத்தில் அமைக்கப்படும் 11 நீர் உறிஞ்சு கிணறுகள் மூலம் பெறப்பட்டு காரியாபட்டி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சிகளுக்கு குடிநீர் வழங்கப்படும்.

இத்திட்டம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம், சுமார் 36,000 மக்கள் பயன்பெறுவர்.

முதலமைச்சர் அவர்கள், இத்திட்டத்தினை ரூ.75.85 கோடி மதிப்பீட்டில் மாநில நகர்ப்புர உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (SUIDF), கலைஞர் நகர்ப்புர மேம்பாட்டு திட்டம் (KNMT) மற்றும் மூலதன மானிய நிதி (CGF) ஆகிய நிதியாதாரங்களின் கீழ் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படவுள்ள இத்திட்டம், காரியாபட்டி பேரூராட்சி மற்றும் மல்லாங்கிணறு பேரூராட்சி ஆகியவற்றின் குடிநீர் தேவையை மேலும் திறம்பட எதிர் கொள்ளும் வகையில் அமைகிறது.

---

### உப்பளத் தொழிலாளர்களின்

# குடும்பங்களுக்கு மழைக்கால நிவாரண நிதி!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

சென்னை, நவ.2-

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள உப்பளத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு மழைக்காலமான அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு நிவாரண நிதி இவ்வரசு பொறுப்பேற்ற கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கி வருகிறது. இதுவரை 21,282 குடும்பங்களுக்கு ரூ.10.64 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2024-ஆம் ஆண்டிற்கான மழைக்கால நிவாரண நிதியானது உப்பளத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தீபாவளி பண்டிகைக்கு முன்னதாக வழங்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன்படி தூத்துக்குடி, நாகப்பட்டினம், திருவாரூர், திருநெல்வேலி, விழுப்புரம், இராமநாதபுரம், செங்கல்பட்டு, கன்னியாகுமரி ஆகிய மாவட்டத்தைச் சார்ந்த 11,329 உப்பளத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 30.10.2024 அன்று அந்தந்த உப்பளத் தொழிலாளர்களின் வங்கி கணக்கிற்கு தலா ரூ..5000/- வீதம் ரூ.5,66,45,000/- (ரூபாய் ஐந்து கோடியே அறுபத்து ஆறு இலட்சத்து நாற்பத்து ஐந்தாயிரம் மட்டும்) வழங்கப்பட்டுள்ளது.

இத்தகவலை முதன்மைச் செயலாளர் / தொழிலாளர் ஆணையர் முனைவர் அதுல் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

---

### தமிழன் தொலைக்காட்சி நிறுவனத்தின்

# ஒளிப்பதிவாளர் விக்னேஷ்வரன் மறைவு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல்!

சென்னை, நவ. 2 -

தமிழன் தொலைக்காட்சி நிறுவனத்தின் ஒளிப்பதிவாளர் விக்னேஷ்வரன் மறைவிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் இரங்கல் செய்தி விடுத்துள்ளார்.

அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு: -

தமிழன் தொலைக்காட்சி நிறுவனத்தில் திருச்சி மாவட்டத்தில் ஒளிப்பதிவாளராகப் (Cameraman) பணியாற்றி வந்த டி.விக்னேஷ்வரன் அவர்கள், உடல்நலக் குறைவு காரணமாக 30.10.2024 அன்று உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனை யடைந்தேன்.

ஊடகத் துறையில் கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக பணியாற்றிய விக்னேஷ்வரன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழன் தொலைகாட்சி நிறுவனத்திற்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின் படி, மறைந்த ஒளிப்பதிவாளர் விக்னேஷ்வரன் குடும்பத்திற்கு பத்திரிகையாளர் நல வாரியத்தின் மூலம் உரிய நிவாரணத் தொகை வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



**வன்முறை என்பது**
**இருபுறமும்**
**கூர்மையுள்ள ஆயுதம்.**

**- அறிஞர் அண்ணா**

---

# திருச்செந்தூர் - கந்தசஷ்டிப் பெருவிழாவுக்கு சிறப்பான ஏற்பாடுகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, நவ. 2 -

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் கந்தசஷ்டி பெருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

திருச்செந்தூர், சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஆண்டுதோறும் கந்த சஷ்டி பெருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்தாண்டு கந்தசஷ்டி பெருவிழா நவம்பர் 2 ஆம் தேதி தொடங்கி, நவம்பர் 7 ஆம் தேதி சூரசம்ஹார மும், 8 ஆம் தேதி திருக்கல்யாணமும் நடைபெறவுள்ளது.

கந்த சஷ்டி விரதம் தொடங்கும் முதல் ஐந்து நாட்களுக்கு தினம் ஒரு லட்சம் பக்தர்களும், சூரசம்ஹார தினத்தன்று சுமார் ஆறு லட்சம் பக்தர்களும், திருக்கல்யாணத்திற்கு சுமார் இரண்டு லட்சம் பக்தர்களும் வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் திருச்செந்தூருக்கு வருகை தருவதால் அவர்களின் தேவைக்கேற்க வாகனங்கள் நிறுத்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. பக்தர்களின் பாதுகாப்பு கருதி 181 இடங்களில் சிசிடிவி கேமராக்க ளும், கண்காணிப்பு கோபுரங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. விழா நாட்களில் சுமார் 2,000க்கும் மேற்பட்ட காவலர்கள் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். அதேபோல் அவசர சிகிச்சை மற்றும் மருத்துவ உதவிக்கு முக்கிய இடங்களில் சிறப்பு மருத்துவ முகாம்கள் அமைக்கப்படுவதோடு ஆம்புலன்ஸ் வாகனங்களும் தயார் நிலையில் வைக்கப்படுகிறது.

சஷ்டி விரதம் மேற்கொள்ளும் பக்தர்களுக்கு கடந்தாண்டை போலவே இந்த ஆண்டும் அவர்கள் தங்கி விரதம் மேற்கொள்ள 18 இடங்களில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் சதுரடி பரப்பளவில் நிழல் கொட்டைகைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அங்கு அடிப்படை வசதிகளான கழிப்பிட வசதி, குடிநீர் வசதி போன்றவை முழுமையாக நிறைவேற்றி தரப்படும். திருக்கோயில் வளாகத்திலுள்ள நிரந்தர கழிவறைகளுடன் 190 தற்காலிக கழிவறைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் விரைவாக தரிசனம் செய்திட சிறப்பு வழி அமைக்கப்பட உள்ளது. கந்த சஷ்டி திருவிழா போது பக்தர்களுக்கு நாள் முழுவதும் அறுசுவை உணவு வழங்கிட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்.

பொது தரிசன வரிசையில் இந்தாண்டு Q Line Complex அமைக்கப்பட்டு அதில் இருக்கை வசதி, மின் விசிறி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பிட வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருக்கோயில் வளாகத்தில் பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து அங்காங்கே அறிவிப்பு பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. கடலில் நீராடும் பக்தர்களின் பாதுகாப்பு கருதி சுழற்சி முறையில் திருக்கோயில் கடல் பாதுகாப்பு பணியாளர்களுடன் மீன்வளத் துறை பணியாளர்கள் இணைந்து பணிபுரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தீ விபத்து களை தடுத்திடும் வகையில் தீயணைப்பு பணியாளர்களுடன் தீயணைப்பு துறை வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் கந்தசஷ்டி நிகழ்வுகளை அனைவரும் கண்டு களிக்கும் வகையில் பெரிய அளவிலான எல்.இ.டி, திரைகள் முக்கிய இடங்களில் அமைக்கப்படுகின்றன.

விழா நாட்களில் திருக்கோயில் மற்றும் அதன் சுற்றுபுறங்களில் சுகாதாரம் மற்றும் தூய்மைப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் சுமார் 400 தூய்மை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டு குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்படும்.

திருக்கோயில் சார்ந்த பாதுகாப்பு பணியில் வெளி முகமையின் மூலம் சுமார் 200 நபர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

திருச்செந்தூருக்கு கூடுதல் பேருந்துகளை இயக்கிடவும், தற்காலிக பேருந்து நிலையங்கள் அமைத்திடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களுக்கு இறைவன் அருள் கிடைக்கவும், விரைவாக தரிசனம் மேற்கொள்ளவும், தேவையான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம், இந்து சமய அறநிலையத் துறை, காவல்துறை, வருவாய்த்துறை, தீயணைப்புத் துறை மற்றும் மருத்துவத் துறை போன்ற அனைத்து அரசு துறைகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்கின்றன. ஆகவே இந்தாண்டு கந்த சஷ்டி பெருவிழா கடந்தாண்டை போலவே வெகு சிறப்பாக பக்தர்கள் மனம் மகிழ்ச்சி அடையும் வகையில் சிறப்பாக அமையும்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

---

### பசும்பொன்னில் தேவர் அரங்கம்!

# முதல்வருக்கு பார்வர்ட் பிளாக் நன்றி!

## பொதுச் செயலாளர் எஸ்.தினகரன் அறிக்கை!

மதுரை, நவ. 2 -

பசும்பொன்னில் தேவர் அரங்கம் அமைத்துக் கொடுத்த முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு அகில இந்திய பார்வர்ட் பிளாக் எஸ்.தினகரன் பிரிவு நன்றி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து இக்கட்சியின் மாநில பொதுச் செயலாளர் எஸ்.தினகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

மக்கள் கோரிக்கையை ஏற்று பசும்பொன் கிராமத்தில் உள்ள முத்துராமலிங்கத் தேவர் நினைவிடத்தில் சுமார் ஒரு கோடியே ஐம்பத்தைந்து லட்சத்தில் தேவர் அரங்கமும் தற்காலிக பந்தலுக்கு பதிலாக நிரந்தர செட் தமிழக அரசு சார்பில் அமைத்து கொடுத்த தமிழக முதல்வருக்கு அகில இந்திய பார்வர்ட் பிளாக் தினகரன் பிரிவு சார்பில் நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

**மூக்கையா தேவர் சிலை!**

இதேபோல் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் அரசியல் வாரிசாக அறியப்படும் மூக்கையா தேவரின் உருவச் சிலைகள் மதுரை சோழவந்தான் சின்னமனூர் பாப்பாபட்டி ஆகிய இடங்களில் உள்ளன.

இவைகள் மோசமான நிலையில் சிதைந்து காணப்படுகிறது.

இவைகளை செப்பனிட்டு மராமத்து பணிகள் செய்து புதுப்பொலிவுடன் காண முதல்வர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அகில இந்திய பார்வர்ட் பிளாக் தினகரன் பிரிவு மாநில பொதுச் செயலாளர் எஸ்.தினகரன் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், முள்ளுக் குறிச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழு) லிட், கடலூர் மண்டலத்தின் சார்பில் முள்ளுக்குறிச்சி – சென்னை புதிய வழித்தடத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.